புதுமலர்: 20 இதழ்: 04 ஆடி - ஆவணி

# அனல்

01.07.2023

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -



# வேண்டாத காரியங்கள்!

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. வினா விடை - 116
05. சிறுவர் வட்டம்
06. குறுக்கெழுத்துப்போட்டி - 114
07. வாலிபர் வளாகம்
08. பெண்கள் பக்கம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. அநீதியை சகித்தல்

## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

**எழுத வேண்டிய முகவரி:**

சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

கிறிஸ்துவுக்குள் பிரியமான அனல் வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். **'இம்மட்டும் உதவின எபினேசர் தொடர்ந்தும் உங்களை நடத்துவார்'.**

இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்காக ஆவியானவராலே வனாந்தரத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நாற்பது நாட்கள் பிசாசினால் சோதிக்கப்பட்டார். அந்நாட்கள் முடிந்த பின்பு இயேசுவுக்கு பசி வந்த போது பிசாசு இயேசுவுடன் பேசி அவருடைய பசியைப் போக்க வழி சொன்னான்.

உணவு என்பது மனிதனுக்கு மிக முக்கியமான தேவைகளில் ஒன்று. நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும், தேவ பிள்ளைகளின் முக்கிய தேவைகளின் நேரத்தில் பிசாசு மிக நெருக்கமாக அணுக முயற்சிப்பான். **முக்கிய தேவை ஒன்றின் நேரத்தில் நாம் யாருக்கு செவி கொடுத்து செயலாற்றுகின்றோம் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.** தேவை சந்திக்கப்பட்டால் போதும் என்ற மனநிலை இருக்குமானால் எம்மால் சோதனையை மேற்கொள்ள முடியாது போகும். அத்துடன் பிசாசின் வலைக்குள் வீழ்ந்துவிடுவோம். எப்போதும் தேவ வசனத்துடன், தேவ சித்தத்திற்குள் நிற்போமானால் பிசாசை மேற்கொள்ள முடியும்.

**'பசி இருக்கின்றது என்பதற்காக இயேசு கல்லுகளை அப்பமாக்க வில்லை'.** இது தான் சோதனையை மேற்கொள்வது. ஏற்கனவே பேசப்பட்ட தேவனுடைய வார்த்தை எம் இருதயத்தில் இருக்குமானால், திடீர் திடீரென எம்மை நோக்கி வரும் ஆலோசனைகளையும், நன்மையான பேச்சுக்களையும் நிதானித்து இனங்காண முடியும். **தேவை சந்திக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்ல கிறிஸ்தவனின் எதிர்பார்ப்பு. இந்த தேவை சந்திக்கப்படும் விதம் எப்படியானது?** என்பதை கவனிக்க வேண்டும். தேவன் உனக்கென்று அனுமதிக்காத எதையும் உன் வாழ்க்கைக்குள் அனுமதிக்காதே.

**லூக்கா 4:3-4 (3.) அப்பொழுது பிசாசு அவரை நோக்கி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும் என்றான். 4. அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்.**

**~ ஆசிரியர் ~**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## உன்னுடைய இயல்பு எது?

❒ வை. விமலதாஸ்

ஒரு இடத்தில் அடர்ந்த காட்டுப்பகுதி காணப்பட்டது. அங்கே பலவிதமான மரங்கள், செடிகள், கொடிகள் காணப்பட்டன. குறிப்பிட்ட சில மாதங்களில் கடும் வறட்சியும், வெப்பமும் நிலவியது. இதனால் ஒரு நாள் அங்கே இருந்த மரங்கள் ஒன்றுடன் ஒன்று உரசி வெப்பத்தினால் தீப்பொறி எழுந்தது. அத் தீப்பொறி பெரும் காட்டுத்தீயாய் மாறியது. இதனால் அக் காட்டிற்குள் காணப்பட்ட மரங்களும் செடிகளும் எரிந்து கொண்டிருந்தன. இதனை அவதானித்த வனக்காவலர்களும், மக்களும் தீயை அணைக்க போராடிக்கொண்டிருந்தார்கள்.

தீயினால் அக் காட்டிற்குள் காணப்பட்ட மிருகங்களும் பறவைகளும் இறந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்தவர்கள் அவற்றையும் காப்பாற்ற முயற்சித்துக் கொண்டிருந்தார்கள். அதன் பயனாக பல மிருகங்கள் காப்பாற்றப்பட்டன. அப்பொழுது அந்த தீயின் நடுவில் செடிகளுக்கு இடையில் ஒரு பாம்பு நெருப்பில் அகப்பட்டு வெந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்த பலர் பாம்பை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் அற்றவர்களாயிருந்தார்கள். ஏனென்றால் பாம்பு தங்களை தீண்டிவிடும் என்ற பயம். ஆனால் அவர்கள் நடுவில் ஒருவன் அந்த பாம்பை பார்த்து அதனை காப்பாற்ற எண்ணினான். உடனே பெரிய தடி ஒன்றை எடுத்து அந்த தீயின் நடுவில் வெந்து கொண்டிருக்கும் பாம்பை வெளியே காப்பாற்ற முயற்சித்தான். அவனின் செயலைப் புரியாத பாம்பு வெளியே எடுக்கும் தருணத்தில் அவனைக் கடித்துவிட்டது. இதனை எதிர்பார்க்காத அந்த மனிதன் உடனே தன்னுடைய கையை உதறினான். இதனால் மீண்டும் பாம்பு மீண்டும் எரிந்து கொண்டிருந்த காய்ந்த செடிகளுக்கு மத்தியில் போய் விழுந்துவிட்டது.

ஆனாலும் அந்த மனிதன் அந்த பாம்பின் செயலை எண்ணி அதனை அந்த தீயின் நடுவில் கைவிட விரும்பவில்லை. மாறாக அவன் தனது கையை துணியினால் கட்டிவிட்டு மறு கையில் தடியை பிடித்து அந்த பாம்பினை வெளியில் இழுந்துவிட்டுக்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை பார்த்துக் கொண்டிருந்த மற்றவன் வந்து கேட்டான், காப்பாற்ற சென்ற உன்னையே கடித்த பாம்பினை மறுபடியும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறாயே... உனக்கு இதெல்லாம் தேவையா? என்று.

அதற்கு அவன் சொன்னான்: பாம்பின் இயல்பு தன்னை தீண்டுபவர்களை சூழ்நிலை அறியாமல் கடிப்பது. ஆனால் எனது இயல்பு அந்த பாம்பை போன்று மற்றவர்களை கடிப்பது அல்ல. என்னுடைய இயல்பு எப்போதும் அடுத்தவருக்கு உதவுவது. அந்த இயல்பை எந்த சூழ்நிலையிலும் மாற்றிக்கொள்ளமாட்டேன் என்று.

ஆம் நண்பர்களே, அந்த மனிதனின் செயலைப் பார்த்தீர்களா? எவ்வளவு அருமையான செயல். இந்த வருடத்தின் நடுப்பகுதியை கடந்துள்ள நாம் சற்று எம் இயல்பை சிந்தித்துப்பார்ப்போம். அந்த பாம்பை போன்று எப்போதும் மற்றவர்களை கடிக்கும் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கிறோமா? அல்லது மற்றவர்களுக்கு உதவும் வேலையை செய்து கொண்டிருக்கிறோமா? சிலவேளை மற்றவர்கள் பாம்பை போன்று எம்மை கடித்திருந்தாலும் நாமும் பதிலுக்கு கடித்துக் கொண்டிருக்கிறோமா? அல்லது எம் இயல்பை மாற்றாமல் அவர்களுக்கும் உதவி செய்து கொண்டிருக்கிறோமா?

**எமக்கான அடையாளம் எது என்பதை எமது எந்த சூழ்நிலையிலும் நிதானம் தவறாத செயல்களே தீர்மானிக்கின்றன.**

**யாத்திராகமம் 23:5 உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவிசெய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடே கூட அதற்கு உதவிசெய்வாயாக.**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

ஒவ்வொரு ஆடு 200.00, ஒட்டகம் 1000.00, ஏர்மாடு 1000.00, கழுதை 200.00 இந்தக் கணக்கின்படி யோபு பக்தனுக்கிருந்த மிருக ஜீவன்களின் விலைக்கிரயம் என்ன? மிருக ஜீவன்கள் எத்தனை? பின்னாலுண்டான ஆசீர்வாதத்தின் கணக்கு என்ன?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

### அனல் 2023 வைகாசி - ஆனி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:

**கோலியாத்தை - தாவீது வெட்டினான். பின்பு தாவீது சவுலின் குமாரத்தி மீகாளை விவாகம்பண்ணினான்.**

(1சாமுவேல் 17:51-54; 18:27; 9:2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு நல்வாழ்த்துக்கள்.

மறுபடியும் நற்செய்திப் பகுதியினூடாக உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ் வருடத்தின் அரைப்பகுதியை தாண்டிவர ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் உதவி செய்தார். என்ன செய்வோம்? எப்படி ஜீவிப்போம்? இதை எப்படி நான் செய்து முடிக்கப்போகின்றேனோ? என ஏங்கிய நேரங்களில் எல்லாம் தேவன் நம்மை கிருபையாக அதிசயமாக இந்நாள் வரை நடத்தி வந்தார். அவருக்கே மகிமையுண்டாகட்டும்.

**சங்கீதம் 118:25 கர்த்தாவே, இரட்சியும்; கர்த்தாவே, காரியத்தை வாய்க்கப்பண்ணும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இங்கே தாவீது என்னும் தேவ மனிதன் சொல்கின்றார்: **'கர்த்தாவே காரியத்தை வாய்க்கப்பண்ணும்'** என்பதாக. ஆம் நம்முடைய கர்த்தர் ஒருவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுகிறவராக இருக்கிறார். உங்கள் வாழ்க்கையிலும் தேவன் இன்று காரியத்தை வாய்க்கப்பண்ண ஆயத்தமாய் இருக்கிறார்.

**யாருக்கு தேவன் காரியத்தை வாய்க்கப்பண்ணுகிறார்?**

**சங்கீதம் 1:3 அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.**

**இந்த ஆசீர்வாதம் யாருக்கு?**

**சங்கீதம் 1:2 கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கிய வான்.**

ஆம், அன்பானவர்களே, நீங்கள் **இரவும் பகலும்** அவருடைய வேதத்தை நேசித்து, வாசித்து அதைத் தியானித்து வாழ்ந்தால் தேவன் சொல்கிறார்; **'அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்'** என்பதாக.

**யோசுவா 1:8 இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்.**

தேவனாகிய கர்த்தர் யோசுவாவைப் பார்த்து சொல்கின்றார்: **உன் வழி வாய்க்கும்.** எப்பொழுது? இரவும் பகலும் நான் உங்களுக்கு எழுதி தந்த நியாயப்பிரமாண புத்தகத்தின் மேல் பிரியமாயிருந்து அதை தியானித்துக் கொண்டிருக்கும் போது மாத்திரமே என்பதாக.

**ஆதியாகமம் 39:23 கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும், அவன் எதைச் செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினபடியினாலும், அவன் வசமாயிருந்த யாதொன்றையும் குறித்துச் சிறைச்சாலைத் தலைவன் விசாரிக்கவில்லை.**

கர்த்தர் உங்கள் தொழில்களில், பிரயாசங்களில், முயற்சிகளில் உயர்வை உண்டாக்க வேண்டும் என ஆசையாக இருக்கின்றீர்களா? ஆம் கர்த்தர் உங்கள் எண்ணங்களை வாய்க்கப்பண்ணுவார். உங்கள் காரியங்களை வாய்க்கப்பண்ணுவார். கர்த்தரோடு இருப்பதற்கு உங்களை விட்டுக்கொடுங்கள். தீமையை விட்டு விலகியோடுங்கள். தீமைக்கு தீமை செய்யாதபடி நன்மையை செய்யுங்கள். கர்த்தர் எல்லாவற்றையும் வாய்க்கப்பண்ணுவார்.

ஆபிரகாமின் குமாரன் ஈசாக்கிற்கு பெண் பார்ப்பதற்காக ஆபிரகாமின் வேலைக்காரனாகிய எலியேசர் அனுப்பப்படுகின்றான். போகின்ற வழியிலே அந்த வேலைக்காரன் நின்று தனக்குள்ளே ஜெபம் செய்கின்றான்: **ஆதியாகமம் 24:12b அதற்கு அவன்: கர்த்தர் என் பிரயாணத்தை வாய்க்கப்பண்ணியிருக்க.**

ஆம் எனக்கு பிரியமானவர்களே, உங்கள் காரியங்களில் நீங்கள் முதலாவது கர்த்தரை நிறுத்துவீர்களானால் உங்கள் பிரயாணங்கள் வாய்க்கும். ஈசாக்கிற்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைத்தது போல உங்களுக்கும் தேவன் நல்லதை வாய்க்கப்பண்ணுவார். அல்லது தீமைக்குள் அகப்பட்டு விடுவோம். எனவே பிரியமானவர்களே எங்கள் திருமண வாழ்க்கை சிறப்புற கர்த்தரை சார்ந்திருங்கள். அவரைத் தேடுங்கள். என் காரியத்தை தேவனே நீர் சித்திக்கப்பண்ணும் என்று சொல்லுங்கள். தேவன் உதவி செய்வார்.

**சரியான வாழ்க்கைத்துணைக்கு நேராக உங்களை நடத்திச் செல்வார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எண்ணாகமம் 14:41 மோசே அவர்களை நோக்கி: நீங்கள் இப்படி கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன? அது உங்களுக்கு வாய்க்காது.**

ஆம் பிரியமானவர்களே, கர்த்தருடைய கட்டளையை மீறி எந்த விடயத்தில் நீங்கள் ஏற முற்பட்டாலும் ஒன்றும் வாய்க்காது.

**11நாளாகமம் 26:5 தேவனுடைய தரிசனங்களில் புத்திமானாயிருந்த சகரியாவின் நாட்களிலே தேவனைத் தேட மனதிணங்கியிருந்தான்; அவன் கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச்செய்தார்.**

ஆம் பிரியமான சகோதர சகோதரிகளே, தேவன் எமக்குத் தரும் நாட்களில் தேவனை உண்மையாக தேடுவோமானால் இரவும் பகலும் வேதத்தை தியானித்து, அதைக் கைக்கொண்டு கர்த்தரை எல்லாவற்றிற்கும் முன்பதாக நிறுத்தி தீமையான காரியங்களை செய்ய முற்படாதிருப்போமாக. அவ்வாறு இருந்தால் தேவன் எமக்காக திருமண காரியங்களாக இருக்கட்டும், தொழில் காரியங்களாக இருக்கட்டும் அது எந்தக் காரியமாக இருந்தாலும் அவர் எல்லாவற்றையும் வாய்க்கப்பண்ணுவார்.



# வினா விடை - 116

01. உங்கள் தேவனுடைய சித்தத்தின்படியே செய்யுங்கள் என்றது யார்?
02. 'இதை மறைக்காமல் கொடியேற்றி விளம்பரம் பண்ணுங்கள்' எதை?
03. 'நன்மை செய்கிறவர்களுக்கு புகழ்ச்சியுண்டாகும்' என்றது யார்?
04. 'வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறவன்' யார்?
05. 'ராஜாவின் முகம் வேறுபட்டது' எப்போது?
06. 'தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்' என்றது யார்?
07. 'உனக்கு சகாயம் செய்வேன் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்' என்றது யார்?
08. முதலாவது கர்த்தரிடம் பொருத்தனை செய்த புருஷன் யார்?
09. சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சி பெற்ற ஒரு சகோதரன் யார்?
10. தன் அறையிலே கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருந்த புருஷன் யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத காணிக்கை



❑ ஜசிந்தா அக்கா




**ஜோ**ன் குடும்பத்தில் ஒரே பிள்ளை. எட்டு வயது நிரம்பிய இவரை பெற்றோர் மிகவும் கவனமாகவும், தேவனுக்குப் பயப்படும் பயத்திலும் வளர்த்து வந்தார்கள். ஜோனும் கீழ்ப்படிந்து பெற்றோர் சொல்லும் மிகவும் சிறிய வேலைகளை தனது சின்னக் கைகளினால் செய்து பெற்றோரை மகிழ்ச்சியாக்குவார். வீட்டிலும், பாடசாலை யிலும், அயல் ஜனங்கள் மத்தியிலும் நல்ல பாராட்டுக்களைப் பெற்றுக் கொள்வார். ஜோன் தனது பெற்றோரோடு ஞாயிறு பாடசாலைக்கும், ஞாயிறு ஆரதனைக்கும் தவறாது செல்லும் பழக்கமுடைய இவர் காணிக்கை போடுவதில் முன்னணியில் நிற்பார்.

ஒரு நாள் ஞாயிறு ஆராதனையில் போதகர் பிரசங்கிப்பதை நன்றாகக் கவனித்துக் கொண்டிருந்த ஜோனின் இருதயம் தேவனால் தொடப்பட்டது. அந் நேரத்தில் இன்றைக்கு ஒரு விசேஷித்த காணிக்கை எடுக்கப்படும். யாவரும் முன்னுக்கு வந்து உங்கள் காணிக்கைகளைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தது.

அப்படியே சபையார் எழுந்து தங்கள் காணிக்கைகளை காணிக்கைத் தட்டில் வைக்கத் தொடங்கினர். ஜோனின் பெற்றோரும் எழுந்தார்கள். ஜோனும் அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு எழும்பினார். 'மகனே நீ இரு நாங்கள் காணிக்கை போட்டுவிட்டு வருகிறோம்' என்றார் அப்பா. இல்லை, நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறேன் என்றார். வரிசையில் பெற்றோருக்கு முன்பாக நடந்து சென்றார். ஜோனின் தருணம் வந்ததும் உடனடியாகக் காணிக்கைத் தட்டில் ஏறி நின்று கொண்டார்.

போதகர், ஜோண் என்றதும் **'என்னை நான் காணிக்கையாக இயேசு அப்பாவிற்கு கொடுத்துவிட்டேன்'** என்றார் ஜோண்.

**பிள்ளைகளே, ஜோனைப் போல் நீங்களும் உங்களை இயேசப்பாவிற்கு கொடுப்பீர்களா? ஆம் நீங்கள் தான் உன்னதமான காணிக்கை.**

**நீதிமொழிகள் 20:11 பிள்ளையானாலும், அதின் செய்கை ............. அதின் நடக்கையினால் விளங்கும்.**

---

# குறுக்கெழுத்துப் போட்டி – 113

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. கெனானா (11நாளாகமம் 18:10)
04. ஈராம் (1இராஜா 5:1)
07. யோனத்தான் (1இராஜா 1:42)
08. எபெனேசர் (1சாமுவேல் 7:12)
10. ஜீவவழியில் (நீதிமொழி 10:17)

**வலமிருந்து இடமாக**

02. காபூல்நாடு (1இராஜா 9:13)
03. கிரியையில் (நீதிமொழி 21:8)
06. யோத்பாத் (உபாகமம் 10:7)
09. அத்திமரம் (நியாயாதி 9:11)
11. பாகால்பிராசீம் (1நாளா 14:11)

**மேலிருந்து கீழாக**

02. காயு (அப்போஸ்தலர் 20:4)
03. கிதியோன் (நியாயாதி 8:11–12)
08. எலியாப் (1சாமுவேல் 17:28)

**கீழிருந்து மேலாக**

05. ஆசகேல் (11இராஜா 8:9)
08. எலியாப் (1நாளாகமம் 2:13)
09. அதோனியா (1இராஜா 1:9)
11. பாலாத்சோர் (11சாமுவேல் 13:23)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | ☒ | | 02 |
| | ☒ | | | | | | 03 | |
| | ☒ | 04 | | | | ☒ | | |
| | | | ☒ | | | | 05 | |
| | | | 06 | | | | | ☒ |
| ☒ | | ☒ | | | | 07 | | |
| | 08 | | | | ☒ | ☒ | | |
| | | 10 | | | | ☒ | 09 | |
| 11 | 12 | ☒ | | | | | | 13 |

**இடமிருந்து வலமாக**

# குறுக்கெழுத்துப் போட்டி 114

01. அபிமெலேக்கின் அப்பா
04. தன் அறையில் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் துக்கித்துக் கொண்டிருந்தவன்
06. இவன் தாதி இவனை எடுத்துக்கொண்டு ஓடிப்போகிற அவசரத்தில் இவன் விழுந்து முடவனான்
08. ‘இந்த எழுத்தை நான் ராஜாவுக்கு வாசித்து, இதின் அர்த்தத்தைத் தெரிவிப்பேன்’ எனக் கூறியவன்
10. ‘மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் ............., ஆனாலும் கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்

**வலமிருந்து இடமாக**

03. அலங்கத்தைக் கட்டுகிற செய்தியைக் கேட்டபோது கோபித்து எரிச்சலடைந்தவன்
05. எலெயாசாரின் குமாரன்
07. ‘கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம் பேரைக் கொன்றேன்’ எனக்கூறியவன்
13. தன் குடும்பத்துக்குத் தீங்கு உண்டானதினால் தன் குமாரனுக்கு பெரீயா என பெயரிட்டவன்

**மேலிருந்து கீழாக**

01. சேனுக்கும் மிஸ்பாவுக்கும் நடுவே நிறுத்தின கல்லின் பெயர்
02. நீர்ப்பாய்ச்சலான நிலங்களைத் தரவேண்டும் என்று காலேப்பிடம் கேட்டவள்
04. ‘பாகாலுக்காக வழக்காடுகிறவன் இன்று காலையிலே தானே சாகக்கடவன்’ எனக் கூறியவன்

**கீழிருந்து மேலாக**

09. தமஸ்குவின் குடிகளை கீர் பட்டணத்துக்குச் சிறைபிடித்துக் கொண்டு போனவன்
11. கர்த்தர் தம்முடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறதைக் கண்டேன் எனக் கூறியவன்
12. யோவாஸ் ராஜாவாக்கப்பட்டதைக் கண்டபோது வஸ்திரங்களை கிழித்துக் கொண்டவன்
13. கோனியாவின் இன்னுமொரு பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ போதகர் வை.தேவதாஸ்




நம்மைக் கைவிடாத தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்களும் உங்கள் குடும்பமும் சுகமாக இருப்பீர்கள் என நம்புகின்றேன்.

அத்தோடு இந்த அனல் சஞ்சிகையை வாசிக்கின்ற உங்கள் அனைவருக்காகவும் ஜெபிக்கின்றோம். உங்கள் தேவைகளை ஜெபத்தில் தாங்க நாங்கள் ஆவலாக உள்ளோம். **எனவே உங்கள் தேவைகளை எங்களுக்கு தெரியப்படுத்த விரும்பினால் தெரிவிக்க முடியும்.** உங்களுடன் சேர்ந்து நாமும் ஜெபிப்போம். கவலைப் படாதிருங்கள்.

வேதாகம வசனத்தைக் கவனித்துப் பாருங்கள்:

**1கொரிந்தியர் 15:57 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.**

தோல்விகள் என்பது நமக்கு நிரந்தரமல்ல, தோல்விகளையும், இழப்புக்களையும் கண்டு கலங்கினவர்களாக, சோர்ந்து போனவர்களாக, முன்னேற்றம் இல்லாத வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா?

**தைரியமாக இருங்கள். நமக்கு ஜெயம் கொடுக்கின்ற தேவன் ஒருவர் இருக்கிறார். அவர் நிச்சயம் நம்மை ஜெயிக்கப்பண்ணுவார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்தை ஜெயிப்பதற்காகவே தேவன் நம்மை அழைத்துள்ளார். எம்முடைய விசுவாசத்தைக் கொண்டு நாம் இந்த சோதனைகள் நிறைந்த உலக வாழ்வை ஜெயிக்க முடியும். தேவன் நிச்சயம் நம்மை பெலப்படுத்துவார். சந்தோஷமாக முன்னேறுங்கள். தேவன் நம்மை பெலப்படுத்தி நமக்கு வழிகாட்டுவார்.

தொடர்ந்து வாலிபர் வளாகச் செய்தியைக் கவனிப்போம்.

எங்களுடைய தீர்மானங்கள், முடிவுகளைக் குறித்து தியானித்து வருகின்றோம். அந்த வகையில் ஆதாம், ஏவாளின் முடிவைத் தியானித்து முடித்திருந்தோம். இரண்டாவதாக சாலொமோன் மகன் ரெகொபெயாமின் முடிவை அல்லது தீர்மானத்தைக் குறித்து கடந்த இதழில் பார்த்தோம். இவ் இதழில் அதன் தொடர்ச்சியை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

**1இராஜாக்கள் 12:5b ஜனங்கள் போயிருந்தார்கள்.**

உடனே எழுந்தமானமாக அவன் முடிவை எடுக்காமல் சரியான முடிவை எடுப்பதற்கு மூன்று நாட்களை அவகாசமாகக் கேட்டான். அவனுடைய ஆரம்ப அடிகள் மிக நிதானமாக, சரியான முறையில் வைக்கப்படுவதைக் காண்கிறோம்.

ஆம்! பிரியமானவர்களே, எம்முடைய வாழ்க்கையில் நாம் இதனைச் சரியாக புரிந்து கொள்ள வேண்டும். எமது குடும்பக் காரியங்கள், தொழில்கள், திருமணங்கள், பதவிகள் எதுவாக இருந்தாலும் அதற்கான அனுமதியை தேவ சமூகத்தில் இருந்து தான் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். எல்ல செயல்களுக்கும் முன்பதாக தேவ சமூகத்தில் காத்திருத்தல் மிகவும் அவசியமானதாகும்.

*எனக்கு ஓர் தகப்பனைத் தெரியும். அவருடைய குடும்ப நிலை அவ்வளவு வசதியானது அல்ல. அத்தோடு அவருக்கு அதிகமான பெண் பிள்ளைகளும் இருந்தார்கள். ஒரு முறை வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவர் அவரது ஒரு மகளை தனது வீட்டிற்கு மருமகளாக்கும் எண்ணத்தோடு அத் தகப்பனிடம் வந்து நீங்கள் ஒரு செலவும் செய்யத் தேவையில்லை. உங்கள் அனுமதியை மாத்திரம் தாருங்கள், மற்றைய எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்றார். அதற்கு அந்த தகப்பன் என்ன சொன்னார் தெரியுமா? உடனடியாக என்னால் எதுவும் சொல்ல முடியாது. ஜெபித்து தேவ சித்தம் அறிந்து தான் பதில் சொல்வேன் என்றார்.*

உண்மை தான் நம்முடைய வாழ்வில் நாம் ஒரு போதும் அவரசப்பட்டுத் தீர்மானங்களை எடுக்கக்கூடாது. இலவசங்களுக்காக உடனே 'ஆமா' போட வேண்டாம். தேவனுடைய பாதத்தில் காத்திருந்து கர்த்தர் கொடுக்கின்ற தீர்மானங்களைச் செய்கின்ற பொழுது தேவன் நிச்சயமாக நம்மை ஆசீர்வதிப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீதிமொழிகள் 3:5-6 (5.) உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, 6. உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்து வார்.**

இப்பொழுதும் இதனை வாசிக்கின்ற சகோதர, சகோதரியே! பொறுமையாக சிந்தித்துப்பாருங்கள். இன்று உங்களது வாழ்வின் பல தொல்லைகளுக்கு காரணம் என்ன? உங்களுடைய சுய விருப்பத்திற்காக உங்கள் சொந்தப் புத்தியை நம்பியது தானே. **கர்த்தருடன் நெருங்கி வாழும் மனிதனின் பாதைகளை தேவன் செவ்வைப்படுத்துவார்.** முழுமையாக நீங்கள் கர்த்தரைச் சார்ந்து வாழும் போது உங்களை எந்த சக்தியாலும் அசைக்க முடியாது. ஆகவே உங்களது ஒவ்வொரு குறிக்கோளையும், திட்டங்களையும், செயல்களையும் ஜெபத்தோடு ஆரம்பித்து, ஜெபத்திலே தொடர்ந்து நிதானமாக செயற்படுத்தி, ஜெபத்தோடு முடிப்பதற்கு கவனமாயிருப்பீர்களாக.

முடிவை எடுப்பதற்கு மூன்று நாட்களை எடுத்துக் கொண்ட ரெகொபெயாம் அடுத்து என்ன செய்கின்றார்.

**1இராஜாக்கள் 12:6 அப்பொழுது ராஜாவாகிய ரெகொபெயாம் தன் தகப்பனாகிய சாலொமோன் உயிரோடிருக்கையில் அவன் சமுகத்தில் நின்ற முதியோரோடே ஆலோசனைபண்ணி, இந்த ஜனங்களுக்கு மறுஉத்தரவு கொடுக்க, நீங்கள் என்ன யோசனை சொல்லுகிறீர்கள் என்று கேட்டான்.**

மூன்று நாட்களைக் கேட்ட ராஜா அடுத்த அடியையும் நிதானமாக வைக்கின்றான். அதாவது தன் தகப்பன் உயிரோடிருக்கும் நாட்களில் அவரோடு இருந்த முதியவர்களோடு ஆலோசனை பண்ணுகின்றான்.

**யோபு 12:12 முதியோரிடத்தில் ஞானமும் வயதுசென்றவர்களிடத்தில் புத்தியும் இருக்குமே.**

என் கருத்தினை தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். **முதியவர்கள் என்று சொல்லும் பொழுது ஆவிக்குரிய ரீதியில் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய அன்பிற்குள் இருப்பவர்கள் என எடுத்துக் கொள்ளலாம்.** ஆகவே ரெகொபெயாம் ஆரம்பத்தில் ஆவிக்குரியவர்களோடு சேர்ந்து நல்ல முடிவை எடுப்பதற்கு முயற்சி எடுப்பதனைப் பார்க்கின்றோம்.

நீங்களும் உங்கள் வாழ்வில் குழப்பங்கள், சிக்கல்கள் வரும்பொழுது உலகப் பிரகாரமான ஞானிகளைத் தேடிச் செல்லாமல் தேவ சமூகத்திற்கு அடுத்தபடியாக நீங்கள் நாடக்கூடியவர்கள் ஆவிக்குரிய முதிர்ந்த தலைவர்களே என்பதை நினைவில் கொள்ளுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய திருச்சபை மக்களின் நிலை மிகவும் வேதனையான கட்டத்தில் இருப்பதனைக் காண முடிகின்றது.

**1கொரிந்தியர் 6:1-2 (1.) உங்களில் ஒருவனுக்கு வேறொருவனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன? 2. பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?**

'பரிசுத்தவான்களிடத்தில் போ' என வேதம் கூறுகின்றது. பிரியமான சகோதர, சகோதரியே! நீங்கள் ஏன் உலக ஜனங்களிடம் ஆறுதலுக்காகவும், விடுதலைக்காகவும் செல்ல வேண்டும்? தேவ மனிதனைவிட உலக மனிதனை நம்ப வேண்டாம். இன்றைய சூழ்நிலையில் தேவ மனிதர்களைவிட உலக மனிதர்கள் மேல் என வீம்பு கொள்ள வேண்டாம். கோதுமைக்குள் பதர் இருப்பது போல் சிறப்பாக தேவனை நேசித்து செயல்படுபவர்களுக்குள் ஒரு சில தரக்குறைவான நடத்தையுள்ள ஊழியர்களும் இருக்கின்றார்கள் என்பது நிஜமானாலும் அதற்காக ஒட்டுமொத்த தேவ மனிதர்களை புறக்கணிக்கும் செயலானது மிகவும் அபயகரமானது என்பதனை மறந்துவிட வேண்டாம். **குறிப்பாக உங்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தி உங்கள் மேல் கண் காணிப்புச் செய்கின்ற உங்கள் முதிர்ந்த போதகரை அல்லது ஊழியரை அற்பமாக எண்ணவேண்டாம்.**

ரெகொபெயாம் எப்படி முதலாவது முதியவர்களைத் தேடிச் சென்றானோ அப்படியே உங்களது வாழ்விலும் தேவன் தந்த தலைவர்களை நாடிச் செல்லுங்கள். அது தான் தேவன் விரும்பும் முறை ஆகும்.

**1நாளாகமம் 12:32 இசக்கார் புத்திரரில், இஸ்ரவேலர் செய்யவேண்டியது இன்னதென்று அறிந்து காலாகாலங்களுக்குத் தகுந்த யோசனை சொல்லத்தக்க தலைவர்கள் இருநூறுபேரும், இவர்கள் வாக்குக்குச் செவிகொடுத்த இவர்களுடைய எல்லாச் சகோதரருமே.**

**நீங்கள் காலத்திற்கு காலம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து உங்களுக்கு சொல்லும் தலைவர்கள் மிக மிக அவசியம். எவ்வளவுக்கு ஞானமுள்ள தலைவர்கள் அவசியமோ அவ்வளவிற்கு அவர்கள் சொல்லுக்கு கீழ்ப்படிவதும் அவசியமாகும்.** உண்மையில் நீங்கள் யாருடைய வாக்குக்குச் செவி கொடுக்கின்றீர்கள்? தேவ மனிதர்களுக்கா? உலக மனிதர்களுக்கா? ஒரு வேளை உங்களுக்கு ஆலோசனை கொடுக்கத்தக்க ஞானம் உங்கள் போதகருக்கு இல்லாமல் இருக்கலாம். அதற்காக நீங்கள் அவரைப் புறக்கணிக்க வேண்டாம். அவரிடம் ஞானம் இல்லாமல் விட்டாலும் தேவ அழைப்பு அவரிடம் உண்டு. எனவே அவர் உங்களுக்காக ஜெபிப்பார். அந்த ஜெபத்தை தேவன் கேட்டு உங்களை அற்புதவிதமாக நடத்துவார். இது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை எனது சொந்த ஊழிய அனுபவத்தில் எத்தனையோ தடவை நான் பார்த்துள்ளேன். பலருக்கு விளக்கம் கொடுக்கத்தக்க அறிவு என்னிடம் பல வேளைகளில் இருந்ததில்லை. ஆனால் அந்த வேளையில் அடியேன் ஜெபித்த ஜெபங்களை கேட்டு தேவன் பிரச்சினையுள்ள மக்கள் மத்தியில் அற்புதமாக செயற்பட்டதனை நான் பார்த்துள்ளேன்.

ஆம்! சிநேகிதரே; உங்கள் போதகர்களை, தலைவர்களை நாடுங்கள். அவர்கள் உங்களுக்காக ஜெபிப்பார்கள். அவர்கள் தரும் ஆலோசனைகளை புறக்கணிக்காமல் தாவீது சொன்னது போல் நாமும் சொல்வோமாக.

**சங்கீதம் 141:5 நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்து கொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை; அவர்கள் இக்கட்டுகளில் நான் இன்னும் ஜெபம் பண்ணுவேன்.**

**நம்முடைய தவறுகளை நேரிடையாக நமக்கு எடுத்துக் கூறி நம்மை திருத்துகின்றவர்களே நம்மை உண்மையாக நேசிக்கும் போதகர்கள் ஆவர்கள்.** ஆகவே இவ்வாறு நமது தவறுகளைச் சுட்டிக்காட்டு கிறவர்களுக்கு நாம் எப்பொழுதும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். அவர்களை நாம் நேசிக்க வேண்டும். அவர்களுக்காக நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும்.

ஏலி கடுமையான வார்த்தைகளைக் கொண்டு அன்னாளைத் தாக்கினாலும் அவள் எவ்வாறு தனது உண்மை நிலையை தாழ்மையோடு எடுத்துக் கூறினாளோ, அது போலவே நீங்களும் உங்கள் போதகர்களுக்கு தாழ்மையோடும், பொறுமையோடும் செவிகொடுங்கள்.

எலியாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த விதவை மாபெரும் அற்புதத்தைக் கண்டாள். அது போல் நீங்களும் உங்கள் எலியாக்களுக்கு கீழ்ப்படியுங்கள். அற்புதத்தைக் காண்பீர்கள்.

ராஜாவாகிய ரெகொபெயாம் முதியவர்களிடம் ஆலோசனை கேட்ட போது அவர்கள் அவனுக்கு என்ன பதில் சொன்னார்கள் என்பதனை தொடர்ந்து பார்ப்போம்.

**1இராஜாக்கள் 12:7 அதற்கு அவர்கள்: நீர் இன்று இந்த ஜனங்களுக்கு சேவகனாகி, அவர்களுக்கு இணங்கி, அவர்கள் சொற்படி செய்து, மறுமொழியாக நல்வார்த்தைகளைச் சொல்வீரானால், எந்நாளும் அவர்கள் உமக்கு ஊழியக்காரராயிருப்பார்கள் என்றார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம், ராஜாவிற்கு முதியவர்கள் அதாவது முதிர்ச்சியடைந்த நல்ல தலைவர்கள் சொன்ன அருமையான ஆலோசனையைத் தான் மேல் உள்ள வேத வசனத்தில் நாம் வாசித்தோம்.

அவர்கள் ரெகொபெயாமைப் பார்த்து நீர் ராஜா தான். ஆனாலும் அவர்களுக்கு சேவகனாக உம்மை மாற்றிக் கொள்வீரானால் அதாவது நீர் **இருக்கின்ற ஸ்தானத்தில் இருந்து இறங்கி தாழ்ந்து போவீரானால் எந்நாளும் அவர்கள் உமக்கு அடங்கியிருப்பார்கள்; உம்மைக் கனப் படுத்துவார்கள்.** என்பதாகச் சொன்னார்கள்.

**பிரியமானவர்களே, உங்கள் வாழ்வில் நீங்கள் இறங்கிப் போவதால் உங்களுக்கு தீமையல்ல; நன்மையே உண்டாகும்.** ஆனாலும் சுய கௌரவம் என்ற ஒன்றை நீங்கள் எப்பொழுது மேன்மைபடுத்த தொடங்குகின்றீர்களோ அன்றே உங்கள் வீழ்கையும் ஆரம்பிக்கின்றது என்பதனை மறக்க வேண்டாம்.

ஒருவேளை இதனை வாசிக்கும் நீங்கள் ஓர் தேவ ஊழியராக இருப்பின் உங்களுக்கு எப்பெரிய பொறுப்பு கொடுக்கப்பட்டிருந்தாலும், எந்தப் பதவியில் நீங்கள் இருந்தாலும், எப்படிப்பட்ட தலைமைத்துவத்தை உடையவராக இருந்தாலும், சிறப்பான வரங்கள் பெற்றவராக இருப்பினும் **உங்கள் எஜமானும் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவைப் போல் உங்களை தாழ்மைப் படுத்த பின் நிற்க வேண்டாம்.** உங்கள் விசுவாசிகளுக்கு உங்களால் எப்படிப் பட்ட பணியை செய்ய முடியும் என்பதனை சிந்தித்து அதனைச் செய்ய முயற்சி எடுங்கள். பிறரின் கால்களைக் கழுவுவதற்குத் தயாராக இல்லாத மனிதன் தேவனுடைய பணியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொள்வதற்கு தகுதி உடையவன் அல்ல.

*ஊழியத்தில் குறிப்பிடத்தக்க ஓர் பொறுப்பில் இருக்கும் போது எனக்கு ஏற்பட்ட ஓர் சம்பவத்தை இவ்வேளையில் நினைவு கூருகின்றேன். ஒரு நாள் ஓர் குறிப்பிட்ட மனிதன் எனது வீடு தேடி வந்து என்னையும் எனக்கு கொடுக்கப்பட்ட பணியைக் குறித்தும் மிகக் கேவலமாக, தரக்குறைவான வார்த்தைகளைப் பயன்படுத்தி பேசிக்கொண்டிருந்தார். ஏற்கனவே இந்த மனிதரை எனக்கு நன்றாகத் தெரியும். என்னுடன் மிகவும் பண்பாகத்தான் பழகுவார். ஆனால் அன்று என்னை வேதனைப்படுத்தக் கூடியதாக மாத்திரமல்ல, மிகவும் கோபப்படக்கூடியவாறும் அவரது நடவடிக்கை காணப்பட்டது. இருப்பினும் பொறுமையைக் கடைப்பிடித்து அவருக்கு அன்பான மறுமொழி வழங்கி, வீட்டிற்குள் அழைத்துச் சென்றேன். அவர் மிகவும் பதட்டத்துடனேயே இருந்தார். ஆனாலும் அவருக்கு தேனீர் கொடுத்து அவரை உபசரித்தோம். ஒரு நொடிப் பொழுதில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமடைந்தவர் தன் தவறினை ஒத்துக் கொண்டு மன்னிப்பு கேட்டார். மாத்திரமல்ல எதன் பின்னணியில் அவர் செயற்பட்டார் என்பதனையும் வெளிப்படுத்தினார். போகும் போது என்னில் இன்னும் கூடிய மதிப்புக் கொண்டவராகவே விடைபெற்றார்.

ஆம் அருமையானவர்களே! பல பிரச்சினைகள் எமது ரோச நரம்பினை சுண்டுவது போல் காணப்படலாம். அப்படியான வேளைகளில் இயேசுவை அதிகமாக நினைவில் கொண்டு வாருங்கள்.

ஒரு பிரசங்கியார் கிறிஸ்தவனுக்கு ரோச நரம்பு வெட்டப்பட்டு செயலற்று இருக்க வேண்டும் என கூறியதை அறிந்திருக்கிறேன். ஆம், அது உண்மையிலும் உண்மையே. சுய கௌரவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் எவ்வளவு இறங்கிப் போக முடியுமோ அவ்வளவிற்கு இறங்கிச் செல்லுங்கள். **ஒரு போதும் நீங்கள் நம்புகின்ற உங்கள் ஆண்டவர் உங்களைக் கைவிடவேமாட்டார்.**

ரெகொபெயாமைப் பார்த்து அவர்கள் என்ன சொன்னார்கள்? 'ஜனங்களுக்கு அன்பான வார்த்தைகளை மறுமொழியாகச் சொல்லும்' என்பதாக.

உண்மை தான்; அன்பில்லாத வார்த்தைகள் தனி மனிதனை நொருங்கச் செய்யும், குடும்பத்தை பாழாக்கும், சபைகளை உடைக்கும். எனவே எப்போதும் கிருபை பொருந்திய வசனங்களைப் பேசுங்கள். குறிப்பாக உங்கள் குடும்ப உறுப்பினர்களோடு பட்சமாய் பேசுங்கள். நல் வார்த்தைகளைப் பேசுங்கள். அப்பொழுது எந்நாளும் உங்கள் குடும்பம் மகிழ்ந்திருக்கும்.

இதனை வாசித்துக் கொண்டிருக்கிற நீங்கள் சில வேளை குடும்ப பிரச்சினையில் சிக்கி பிரிந்து வாழ்ந்து கொண்டிருக்கலாம். அன்பரே! இப்பொழுதே நீங்கள் இறங்கிப் போய் உங்கள் குடும்பத்துடன் ஒப்புரவாகுங்கள். உங்கள் நீதி, நியாயங்களோடு செல்லாமல் அன்பான நல் வார்த்தைகளோடு செல்லுங்கள். கர்த்தர் உங்களுக்கு இளைப்பாறுதலைக் கட்டளையிடுவாராக.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலைத்திருங்கள்...

❒ திருமதி. J.பிலிப்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவனுடைய கிருபையினால் இவ் வருடத்தின் ஆறு மாதங்களை கடந்து வந்துள்ளோம். இன்னும் ஆறு மாதங்களை கடக்க தேவன் உதவி செய்வாராக.

நிலைத்திருங்கள் எதில், எப்படி, எங்கு நிலைத்திருக்க வேண்டும். **பிலிப்பியர் 4:1b இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்.** சகோதரியே நீ இன்று எதில் நிலைத்திருக்கிறாய்? உன்னுடைய சொத்துக்கள் மேலா? நீ சிந்திக்க வேண்டிய வேளை இது.

**யோவான் 15:4 என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்;** நாம் நிலைத்திருக்க வேண்டியது நமது ஆண்டவரிடத்தில் மாத்திரமே. இன்று அநேக குடும்பங்களில் கணவன், மனைவி ஒருமித்து நிலைத்திருக்க முடியாது, பிள்ளைகள் பெற்றோரில் நிலைத்திருக்க முடியாது, விசுவாசி தேவன் தன்னை வைத்திருக்கும் சபையில் நிலைத்திருக்க முடியாது. சகோதரியே தேவனிலும், தேவனுடைய வார்த்தையிலும், தேவன் தந்த சபையிலும் நிலைத்திருக்க நாம் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படி நீ நிலைத்திருந்தால்; **யோவான் 15:7 நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.**




**யோவான் 15:6 ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்.**

*வீட்டுத் தோட்டத்தில் மிகவும் பிரியமாய் இருந்த ஒரு சகோதரி செடி, கொடி, மரங்கள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனை செய்யும் இடத்திற்குச் சென்று மரக் கன்றுளை வாங்குவதற்காக பார்த்த போது; 'உயிர்த்தெழுதல் செடி' என்று பெயரிடப்பட்ட ஒரு செடியை கண்டார். அதைப் பார்த்த போது அது மிகவும் காய்ந்து போய் இருந்தது. அதன் பெயர் 'உயிர்த்தெழுதல் செடி' ஆனால் அதைப் பார்க்கும் போது காய்ந்து போய் இருந்தது. இருப்பினும் அதன் விலை குறைவாக காணப்பட்டபடியாலும் வீட்டில் அதை வளர்த்துப் பார்க்கலாம் என்ற எண்ணத்துடனும் அச் செடியை வாங்கினாள். தோட்டக்காரனிடம் அதை எப்படி பராமரிக்க வேண்டும் என்பதை கேட்டறிந்தாள். வாங்கி வளர்க்க ஆரம்பித்தாள். அச் செடிக்கு என்ன காரியங்களையெல்லாம் செய்ய வேண்டும் என்று தோட்டக்காரர் கூறியிருந்தாரோ அவைகளையெல்லாம் ஒழுங்காக செய்த வந்தாள். என்ன ஆச்சரியம், காய்ந்த செடி இப்போது அழகாக ஒரு 'உயிர்த்தெழுந்தசெடி' போன்று காணப்பட்டது.

இதை வாசிக்கும் சகோதரியே, ஒரு வேளை உன் வாழ்க்கையும் ஒரு காய்ந்த செடியைப் போல உனக்குத் தென்படலாம். ஆனால் உனக்கு ஒரு நல்ல செய்தி உண்டு. நீ முதலாவது தேவனிலும், தேவ வார்த்தையிலும், தேவன் உன்னை வைத்திருக்கும் திருச்சபையிலும் நிலைத்திருக்க வேண்டும். அப்போது தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வாய். ஒரு 'உயிர்த்தெழுந்த செடியை' போல் நீ காணப்படுவாய்.

இன்று அனேக பெண்களின் வாழ்க்கையும் இப்படி ஒரு காய்ந்த செடியைப் போன்று காணப்படலாம். காரணம் ஜீவ தண்ணீரை பருகத்தவறிவிடுகின்றார்கள். அனுதினமும் வேதவாசிப்பு, ஜெபம், தேவனுடைய சபைக்கு செல்லாமல் இருத்தல், இப்படியானவர்களுடைய வாழ்க்கை ஒரு காய்ந்த செடிக்கு ஒப்பாயிருக்கிறது.


இன்றைக்கே ஒரு தீர்மானம் எடுப்பாயாக இருந்தால் உன் வாழ்க்கை அழகான செடியாக மாறும். நீ செய்ய வேண்டியது; வேதவாசிப்பு, ஜெபம், தேவனுடைய ஆலயத்திற்கு செல்லுதல், தேவன் உனக்காக ஆயத்தப்படுத்தியிருக்கும் பெண்கள் ஜெபத்தில் கலந்து கொள்ளுதல்.

**யோவான் 15:10 நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறது போல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்திருப்பீர்கள்.**

**1யோவான் 2:28 இப்படியிருக்க, பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப்போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# இசபெல் கூன்

## 1901 - 1957

### ஏமாற்றம் ஏமாந்து போகும்..

**வா**ழ்க்கையிலே விரக்தி. ஏமாற்றங்கள், நம்பியவர்கள் கைவிட்டனர். தனிமை வாட்டி எடுத்தது. தூக்கம் வரவில்லை. தற்கொலை செய்து கொள்ளலாமா?

இவ்வாறு பல்வேறு எண்ணங்களுடனும், மனப்போராட்டங்களுடனும் சிக்கித் தவித்த இசபெல் கூனை ஆண்டவர் தம் பணிக்கு அழைத்தார்.

தூசி படிந்து கிடந்த வேதாகமம் திறக்கப்பட்டது. அழுக்கடைந்த இசபெல்லின் வாழ்வும் அதனால் கழுவப்பட்டது. தன்னை ஓர் மிஷனெரியாக ஆண்டவரிடம் அர்ப்பணித்தார்.

1928ஆம் ஆண்டு சீன தேசத்திற்குப் புறப்பட்டார் இசபெல். கடினமான மொழிப் பிரச்சினை காணப்பட்டாலும் கனிவுடன் மக்களை நேசித்து அவர்களுடன் அன்புடன் பழகினார்.

திறந்த வெளிக்கூட்டங்கள் மூலம் அநேகருடைய இருதயத்தை திறந்தார். இயேசு கிறிஸ்துவின் அன்பு மக்களின் இருதயங்களை ஆட்கொண்டது.

லிசு மக்கள் மத்தியில் அவரின் பணி அளவிடமுடியாத அளவு பெருகியது. கணவர் ஜானின் உற்சாகம் இன்னும் உத்வேகத்தையும், உறுதியையும் தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மகளையும் மிஷனெரிப்பணிக்கு அர்ப்பணித்தார் இசபெல். வேதபாடப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. அநேக வாலிபப் பெண்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். பின்னர் ஆண்களுக்கெனவும் வேதபாடப் பள்ளிகள் நடத்தப்பட்டது.

நற்செய்திப் பணிக்கு நடுவே ஏற்பட்ட போர் பிரச்சினைகள் மத்தியிலும், அயராது அரும்பணியாற்றினார் இசபெல். சீனா கம்யூனிச நாடாக மாற்றப்பட்ட போதிலும், இசபெல் லிசு மக்களைக் கர்த்தரின் நாட்டிற்குச் சொந்தக்காரராக மாற்றிய பணி சிறப்பானதாகும்.

**அன்பரே! உங்கள் வாழ்வின் ஏமாற்றங்களை ஆண்டவர் ஜெயமாக மாற்றுவார் என நம்புகிறீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** மோட்சத்தின் பொன் மதில்களுக்கு வெளியே என் தலையை நீட்டி லிசு சபையை பார்த்துக் கொண்டிருப்பேன் — இசபெல் கூன்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" மார்ச் 20**



# ரோலன்ட் பின்க்காம்
## 1872 - 1942

எழும்பி பிரகாசி

ஆப்பிரிக்காவின் மிஷனெரி சரித்திரம். ரோலன்ட் என்ற மிஷனெரியால் சிறந்த முன்னேற்றம் பெற்றது. ஐந்து வருட ஊழியத்தில் பத்தாயிரத்திற்கும் அதிகமான விசுவாசிகள். 100க்கும் மேற்பட்ட ஆராதனைக் குழுக்கள். இவை யாவுமே ஊழியத்தின் வளர்ச்சியை வெளிப்படுத்தியது.

இங்கிலாந்து தேசத்தில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த ரோலன்ட் தனது குடும்பச் சூழ்நிலையின் காரணமாக, கனடா நாட்டிற்கு வேலை தேடிச் சென்றார். அங்கு ஆண்டவரின் அழைப்பைப் பெற்று, தன்னை மிஷனெரியாக அர்ப்பணித்தார்.

இரட்சண்ய சேனை இயக்கத்தில் சேர்ந்த இவர், தேவன் தன்னை சூடான் தேசத்திற்கு மிஷனெரியாக அழைப்பதை உணர்ந்தார். மூன்று பேருடன் புறப்பட்ட இவரது பயணம், வழியிலே ஏற்பட்ட மலேரியா காய்ச்சலால் தடைப்பட்டு நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இவர் இங்கிலாந்து திரும்பிவிட்டார். இவரது இரண்டாவது பயணமும் பல தடைகளால் பாதியில் நின்றது.

இதைக் குறித்து ரோலன்ட் கூறும் போது, தேவன் பேரில் உள்ள எனது விசுவாசம் அடித்தளம் வரை ஆட்டம் கண்டது. இருளில் இருக்கும் மக்களுக்கு இயேசுவின் கடைசி கட்டளையான சுவிசேஷத்தை பிரசங்கிக்கத்தானே சென்றோம். ஊழியப் பாதையின் ஆரம்பத்திலே இப்படிப்பட்ட ஒரு கஷ்டமா? போன்ற பல கேள்விகள் என் மனதைக் குடைந்தது. இறுதியாக உறுதியான கற்பாறையாகிய இயேசுவின் மேல் விசுவாசம் வைக்க கற்றுக் கொண்டேன்.

1895இல் வேதாகம கல்வி கற்ற இவர், 1898ஆம் ஆண்டு 'சூடான் உள்நாட்டு மிஷன்' என்ற மிஷனெரி சங்கத்தை நிறுவினார். இவரது மூன்றாவது மிஷனெரிப் பயணம் வெற்றியாக அமைந்தது. இஸ்லாமியர்கள் மத்தியில் சுவிசேஷத்தை மிகவும் வாஞ்சையுடன் அறிவித்தார். பல எதிர்ப்புகள் மத்தியிலும் ஊழியம் விரிவடைந்தது. 1920ஆம் ஆண்டு தொழுநோயாளிகள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட பணி மூலம் 30000 பேர் பயனடைந்தனர். 50 வருடங்கள் அங்கு பணிசெய்த இவர் இறைவனின் திட்டத்தைச் செவ்வனே நிறைவேற்றினார். எத்தியோப்பியா பகுதியில் இவர் செய்த ஊழியம் இன்றும் தொடர்கின்றது.

**அன்பரே! தடைகளைத் தாண்டி சுவிசேஷப் பணியை தீவிரமாக அறிவிக்கின்றீர்களா?**

வாழ்விலிருந்து வாழ்வுக்கு: மிஷனெரிகள் நிலைத்து நின்றதற்கான முக்கிய ஆதாரம், ஜெப ஆதரவாளர்களின் ஜெபமே. — ரோலன்ட்

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஆகஸ்ட் 05**

---




**ஆரம்பத்தில் கடினமாய் இருந்தாலும் உங்களைத் தீட்டுப்படுத்தாத தேவ வார்த்தையின்படியான வாழ்வை பிரயாசப்பட்டு வாழுங்கள்.**

**தேவனுடனான உறவில் நிலைத்திருக்க தேவனுக்கேற்ற கடினமான வாழ்க்கை முறை எமக்கு உதவி செய்யும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ போதகர் எமில் ஜக்ஷன் சூசைப்பிள்ளை




**உபாகமம் 33:27-28 (27.) அநாதி தேவனே உனக்கு அடைக்கலம்; அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம்; அவர் உனக்கு முன்னின்று சத்துருக்களைத் துரத்தி, அவர்களை அழித்துப்போடு என்று கட்டளையிடுவார். 28. இஸ்ரவேல் சுகமாய்த் தனித்து வாசம்பண்ணுவான்; யாக்கோபின் ஊற்றானது தானியமும் திராட்சரசமுமுள்ள தேசத்திலே இருக்கும்; அவருடைய வானமும் பனியைப் பெய்யும்.**

**நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாக இருக்கிறோம். நாம் சுகமாய் தனித்து வாசம் பண்ண வேண்டும்.**

ஆவிக்குரிய இஸ்ரவேலராக அழைக்கப்பட்டுள்ள எமது வாழ்விலும் நாம் துரத்த வேண்டிய சத்துருக்களை இனங்கண்டு அதனைத் துரத்திவிடா விட்டால் நாம் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற முடியாதபடி அது நமக்கு கண்ணியாக அமைவதோடு அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்துருக்கள் நாம் தேவனோடு தனித்து வாசம்பண்ண முடியாதபடியும் தேவ னோடு நமக்குள்ள தெய்வீகமான உறவுக்கும் இடையூறாக அமைந்துவிடு வார்கள். **எனவே நமது வாழ்வில் நாம் துரத்த வேண்டிய சத்துருக் களை இனங்கண்டு அவர்களைத் துரத்த ஆயத்தப்படுவோம்.** ஆகவே இஸ்ரவேலருடைய வாழ்க்கையை ஆராய்ந்து நாம் துரத்த வேண்டிய சத்துருக்கள் யார் என அறிந்து கொள்வோம்.

## *01. மோவாபியர்*
### *(துகப்பனின் சந்ததி - மாய்மாலத்தினால் உருவானது)*

நியாயாதிபதிகள் 3:12-13 (12.) **இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த் தரின் பார்வைக்குப் பொல்லாப்பான தைச் செய்தார்கள்; அவர்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவை இஸ்ர வேலுக்கு விரோதமாய்ப் பலக்கப் பண்ணினார். 13. அவன் அம்மோன் புத்திரரையும் அமலேக்கியரையும் கூட்டிக்கொண்டுவந்து, இஸ்ரவேலை முறிய அடித்தான்; பேரீச்சமரங்களின் பட்டணத்தையும் பிடித்தான்.**

மோவாபிய சந்ததி எப்படி உருவானது என்பதை அதியாகமம் 19ஆம் அதிகாரத்தில் காணலாம் **(ஆதியாகமம் 19:31-38)** ஓர் தவறான உறவின் மூலம் பிறந்த சந்ததியே மோவாப் ஆகும். இந்த தவறான உறவுக்கு லோத்தும் அவனு டைய குமாரத்திகளுமே காரணமாக அமைகின்றனர். **ஆபிரகாமுடன் தன் பிரயாணத்தை ஆரம்பித்த லோத்து தீர்மானம் எடுக்க வேண்டிய முக்கிய சந்தர்ப்பத்தில் மாய்மாலம் பண்ணு கிறான்.** அதாவது கர்த்தருடைய சத்தத்தோடு இணைந்து கீழ்ப்படிந்தவன் இப்போது தன் சுய இலாபத்தை தெரிவு செய்கிறான். ஏதேன் தோட்டத்தைப் போல தென்பட்ட இடத்தை தெரிவு செய்கின்றான். இதன் விளைவே அவன் சோதோமில் தங்குவதற்கான காரண மாக அமைகின்றது. இதனால் வாக்குத் தத்தம் பண்ணப்பட்ட இனத்திற்கு எதிராக இரண்டு ஜாதிகளை அவன் உருவாக்கிவிடுகின்றான். **லோத்துவுக்கு தேவ சத்தத்திற்கு கீழ்ப்படிய வேண்டும் என்ற உணர்வு இருந்தும் உலக செழிப்பின் மேல் ஆசை இருந்த தையே இது காண்பிக்கிறது.** இந்த லோத்துவின் மாய்மாலத்தினால் பிறந்த வன் தான் மோவாப் (துகப்பனின் சந்ததி).

**நாமும் கூட மாய்மாலம் உள்ள கிறிஸ்தவர்களாக இருந்தால் தேவன் எம்மில் பிரியமாய் இருக்கமாட்டார். மாய்மாலம் பண்ணுகிற கிறிஸ்தவர் களாக நாம் இருப்போமாக இருந்தால் உண்மையாய் நடக்கும் தேவனு டைய பிள்ளைகளுக்கு எப்பொழுதும் பிரச்சினை கொடுப்பவர்களாகவே காணப்படுவோம்.** வெளித்தோற்றத் திற்கு நம் வாழ்வு உண்மைக் கிறிஸ்த வர்கள் போல் நன்றாக காணப்பட்டாலும் நம் இருதயம் தேவனோடு தனித்து வாசம்பண்ண முடியாதபடி நாம் தேவனு டைய உறவுக்கு தூரமானவர்களாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுவோம். இந்த நிலையில் இருந்து நாம் மனந்திரும்பாவிட்டால் பரலோக ராஜ்யத்திற்கு ஒருபொழுதும் செல்ல முடியாது. எனவே நாம் மாய்மாலம் உள்ளவர்களாய் இராமல் தேவனோடு சுகமாய் தனித்து வாசம் பண்ணும் உண்மைக் கிறிஸ்தவர் களாக வாழ இன்றே நம்மை அர்ப் பணித்து மாய்மாலம்என்னும் சத்துருவை அகற்றி அழித்துப் போடுவோமாக.

## 02. அம்மோனியர் (விசாலமான பாதையை தெரிந்து கொள்ளும் கூட்டம்)

**மத்தேயு 7:13 இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக் குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழி யாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.**

**நியாயாதிபதிகள் 3:13 அவன் அம்மோன் புத்திரரையும் அமலேக்கிய ரையும் கூட்டிக்கொண்டுவந்து, இஸ்ர வேலை முறிய அடித்தான்; பேரீச்ச மரங்களின் பட்டணத்தையும் பிடித்தான்.**

மோவாபின் சகோதரனே அம் மோன். 'ஆசான், கட்டுபவன், மறைக்கப் பட்ட ஒன்று' என்று அர்த்தம் கொள்ளக் கூடிய அம்மோனியரை குறித்து இவர்கள் **'விசாலமான பாதைகளை தெரிவு செய்பவர்கள்'** என்ற எண்ண மும் உள்ளது. இதனடிப்படையில் இவர்களை விசாலமான பாதையை தெரிவு செய்யும் கூட்டத்திற்கு அடை யாளப்படுத்த முடியும்.

**இன்றும் கூட தேவனோடு நாம் தனித்து வாசம்பண்ண முடியாதபடி தேவனுக்கும் நமக்கும் நடுவாக பிரிவினையை உருவாக்கும்படி பிசாசு எமக்கு முன்பாக வைத்துள்ள விசாலமான பாதையை நாம் சத்துருவாக நினைக்கத் தவறுவ தால் தேவனுடைய ராஜ்யத்திற்கு தூரமானவர்களாக காணப்படுகி றோம்.** தேவ சித்தம் இல்லாத விசால மான, வசதியான, சொகுசான வாழ்வு அது நரகத்தை நோக்கியே நம்மை அழைத்துச் செல்லும். தேவன் எமக்கு வைத்துள்ளது இடுக்கமும், நெருக்க முமான பாதையே ஆகும். தேவன் வைத்துள்ள இந்த பாதை வழியாக நாம் சென்றாலே தேவனோடு நாம் தனித்து வாசம்பண்ண முடியும்.

நாம் விசாலமான பாதையைத் தெரிந்து கொண்டால் அது தேவையற்ற காரியங்களை நம்மைச் செய்யப் பண்ணி நம்மை பாவம் செய்கிறவர்க ளாக்கிவிடும். எனவே நம் திராணிக்குத் தக்க வாழ்வு நாம் வாழாமல் விசாலமான பாதையாகிய வசதியான வாழ்வை நாம் தெரிந்து கொண்டு நரகத்திற்கு செல்லாத படி நம் வாழ்வை ஜாக்கிரதையாக காத்துக் கொள்ள வேண்டும். தேவனு டைய வார்த்தையின் வரம்புக்குள் நாம் வாழும்பொழுது அதிகமாக நெருக்க மான பாதைகளுக்கூடாகவே நாம் போக வேண்டி ஏற்படலாம். அப்போதெல் லாம் **நாம் சோர்ந்து போகாமல் அல்லது நம் கிறிஸ்தவ வாழ்க் கைக்கு எதிரியான விசாலமான வாழ்க்கையைத் தெரிந்து கொள்ளா மல் பொறுமையுடன் தேவன் நமக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுமதித்த நெருக்கமான பாதையில் சென்றாலே நாம் தேவனோடு வாசம்பண்ண முடியும்.**

தேவ சித்தத்திற்குட்பட்ட ஆசீர்வாதமான வாழ்க்கையைப் பற்றி இங்கு கூறவில்லை. தேவன் கொடுக்கும் ஆசீர்வாதங்கள் எம்மை தேவ திட்டத்திற்குள் வைத்திருக்கும். தேவன் மாத்திரம் மகிமையடையக்கூடியவிதமாய் இருக்கும். நெருக்கமான வழியாக இருந்தாலும் தேவ சமாதானமும் சந்தோஷமும் நம்மை ஆளுகை செய்யும்.

**நியாயாதிபதிகள் 3:15 இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் அவர்களுக்குப் பென்யமீன் கோத்திரத்தானாகிய கேராவின் மகன் ஏகூத் என்னும் இரட்சகனை எழும்பப் பண்ணினார்; அவன் இடதுகைப் பழக்கமுள்ளவனாயிருந்தான்; அவன் கையிலே இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்குக் காணிக்கை அனுப்பினார்கள்.**

இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் ஏகூத் மூலம் அம்மோன் புத்திரரின் கையில் இருந்து விடுதலை கொடுத்ததை நாம் காண்கிறோம். கேரா என்றால் 'தியானம்' என்று பொருள்படும். ஏகூத் என்றால் 'நான் துதிப்பேன்' என்பதாக அர்த்தப்படும். நாம் எப்போதும் தேவனுடைய வார்த்தையைத் தியானிப்பவர்களாகவும் தேவனைத் துதிப்பவர்களாகவும் இருந்தால் விசாலமான பாதை என்னும் சத்துருவை நாம் எளிதாய் மேற்கொள்ள முடியும். **விசாலமான பாதை எம்மை தேவனுடைய வார்த்தையிலிருந்து விலகப்பண்ணும். நெருக்கமான பாதையினூடாகவே நாம் கடந்து செல்லும் போது தேவனோடு நாம் தனித்து வாசம்பண்ணுவோம்.** நாம் விசாலமான பாதைகளையல்ல தேவனைக் குறித்த எண்ணமுடையவர்களாக இருந்து அவரைத் துதிக்கும் பொழுது இந்த விசாலமான பாதைகள் மூலம் வருகிற எல்லாப் பாவமான காரியங்களில் இருந்தும் ஆண்டவர் எம்மை விடுதலையாக்குகிறார். நாம் எமக்கு அதிகமான பணம் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பதைவிட தேவனுடைய வசனத்தை அதிகமாய் அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும். அதிகமான சொத்துக்களையல்ல அதிகமான வாக்குத்தத்தங்களையே நாம் நாட வேண்டும். அப்போது நாம் அதிகமாக தேவனைத் துதிப்பதால் அதிகமான தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம்.

விசாலத்திற்காக நாம் கிரியை செய்ய ஆரம்பித்தால் தேவனுடைய தியானத்தையும் துதியையும் இழந்து விடுவோம். துதியும் தியானமும் நம்மைவிட்டகன்றால் நாம் விசாலமான பாதையாகிய பாவத்தில் விழுந்து விடுவோம். எனவே நம் சத்துருவாகிய விசாலமான பாதையில் இருந்து விலகி தேவன் நமக்கு வைத்துள்ள பாதையின் வழியாக சென்று பரலோக ராஜ்யத்தை சுதந்தரிப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. கானானியர்
### (வியாபாரிகள், தேவ பக்தியை ஆதாயத் தொழிலாக எண்ணுபவர்கள்)

**நியாயாதிபதிகள் 4:2 ஆகையால் கர்த்தர் அவர்களை ஆத்சோரில் ஆளுகிற யாபீன் என்னும் கானானியருடைய ராஜாவின் கையிலே விற்றுப்போட்டார்; அவனுடைய சேனாதிபதிக்குச் சிசெரா என்று பேர்; அவன் புறஜாதிகளுடைய பட்டணமாகிய அரோசேத்திலே குடியிருந்தான்.**

நாம் பரலோக ராஜ்யம் செல்ல வேண்டும் என்ற தேவனுடைய எதிர் பார்ப்பினாலேயே இரட்சிப்பை தேவனிடம் பெற்றுக் கொண்டோம். அதற்காகவே நாம் இந்தப் பூமியில் இருக்கும் போது தகுதிப்படுத்தப் படுகிறோம். ஆனபடியினாலே தேவன் சபையை, ஊழியர்களை நமக்குக் கொடுத்துள்ளார். எனவே நாம் தேவனை ஆராதிக்கவே சபைக்கு வருகிறோம் என்ற உணர்வுடன் வராமல் நமக்கு என்ன உதவி கிடைக்கும் என்ற நினைப்போடு மாத்திரம் வந்தால் நாம் தேவ பக்தியை ஆதாய தொழிலாக எண்ணும் கானானியர்கள் என்பதே உண்மையாகும். ஆலயத்திற்கு ஒழுங்காக வரும் போது போதகர் உதவி செய்வார் என்ற நினைப்போடு வரக்கூடாது. நாம் கிறிஸ்தவர்களாகி தேவனை ஆராதிப்பது பரலோக ராஜ்யம் செல்ல வேண்டும் என்பதற் காகவே என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

நாம் கிறிஸ்தவர்களாக இருப்பத னால் சபையாலும் சமுதாயத்தாலும் சலுகைகள் (நிவாரணங்கள், பண உதவிகள்) கிடைக்கும் என்பது எமது நோக்கமாக இருக்கக்கூடாது. இது நமது ஆவிக்குரிய வாழ்வின் பெரிதான எதிரியாகும். இதனை நாம் அழிக்காத வரை தேவனோடு தனித்து சுகமாக வாசம்பண்ண முடியாது.

கானானிய ராஜாவாகிய யாபீன் என்பதற்கு 'சிந்தனை' என்று அர்த்தப் படும். ஆத்சோர் என்றால் 'அடைப்பு' என்று அர்த்தப்படும். மனித சிந்தனை யினாலே அடைக்கப்பட்ட நிலையினை இந்தக் காரியம் நமக்கு எடுத்துக் காண்பிக்கிறது. நாம் மனித ஞானத்திற் குள் அடைபட்டு இருக்கின்றபடியால் தேவ ஆசீர்வாதங்களை பெற முடியாமல் இருக்கிறோம். மனித ஞானம் தேவனு டைய கிரியைகளை தடைபண்ணும்.

கானானிய ராஜாவாகிய யாபீனை வெற்றி கொண்டது தெபோராள் என்னும் பெண்மணியாவாள். தெபோராள் என்றால் 'வார்த்தை' என்று நாம் எடுத்துக் கொள்ளலாம். மனித ஞானத்தினாலே அடைக்கப்பட்டிருக் கின்ற வாழ்வு தேவ வார்த்தையினாலே மேற்கொள்ளப்படும்போதுதான் தேவ ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொள்ளலாம். மனித ஞானமானது வேதனை தரும் ஒன்றாகவே இருக்கி றது. கானானியர் இஸ்ரவேலருக்கு வேதனை உண்டுபண்ணுகிறவர்காக இருந்தார்கள். தேவ வார்த்தை நம் வாழ்வில் வரும் போது மனித ஞானத்திலிருந்து நாம் விடுவிக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம். எனவே தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிவதே நம் நோக்கமாக இருக்க வேண்டும். தேவனை நம்பி வாழ வேண்டும்.

தெபோராளின் கணவனாகிய லபிதோத் என்ற பெயரின் அர்த்தம் 'அக்கினிப் பொறி' என்பதாகும். தெபோராளின் உதவியாளன் பெயர் பாராக். பாராக் என்றால் 'நியாயத்தீர்ப்பு' என்று அர்த்தமாகும். தேவனுடைய ஆவியானவர் வார்த்தையினாலே நியாயந்தீர்க்கிற போது தேவனுடைய ஜனத்திற்கு விடுதலை உண்டாகிறது. எனவே நாம் மனித ஞானத்தினால் அடைக்கப்படாமல் தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவராலும் வழிநடத்தப்படுவோமானால் நாம் தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெறுவோம். நமது மனித திட்டங்கள் ஒருபோதும் நமக்கு உதவி செய்யாது. தேவனை நம்பி நாம் வாழும் வாழ்வே நம்மை செழிக்கப்பண்ணும். நாம் கர்த்தரை நம்புகிறவர்களாக இருந்தால் தேவனுடைய ஆவியானவரால் நடத்தப்படவும் தேவனுடைய வார்த்தை நம்மை நியாயந்தீர்க்கவும் விட்டுக்கொடுப்போம்.

இஸ்ரவேலர்கள் அழிக்க வேண்டிய சத்துருக்களை தங்களுக்கு வேலைக்காரராக வைத்துக் கொண்டதால் அவர்களே தேவ ஜனத்திற்கு பிரச்சினை கொடுப்பவர்களாக மாறினார்கள். **இது போலவே நம் வாழ்விலும் மாய்மாலம், விசாலமான பாதை, தேவ பக்தியை ஆதாயத் தொழிலாக நினைக்கும் தன்மை போன்ற சத்துருக்களை துரத்தி நாம் அழிக்காவிட்டால் நாம் ஒரு போதும் பரலோக ராஜ்யம் செல்லவே முடியாது.** எனவே சத்துருக்களை அகற்றி தேவ ராஜ்யத்தை சுதந்தரிப்போம்.

**'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'**



**மகிழ்ச்சிக்கு பிசாசின் மாற்றீடாக பொழுதுபோக்கு உள்ளது. கர்த்தரில் உங்களுக்கு எவ்வளவு சந்தோஷம் இருக்கிறதோ, அவ்வளவு குறைவான பொழுதுபோக்கே உங்களுக்குத் தேவை.**

*- Leonard Ravenhill -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினாவிடை 115

## சரியான பதில்கள்

01. ஓபேத் - ரூத் 4:13-17
02. எரேமியா - எரேமியா 6:11
03. இயேசு கிறிஸ்து - மத்தேயு 24:29
04. எரேமியா - எரேமியா 31:18
05. விபசாரம்பண்ணுகிறவன் - நீதிமொழிகள் 6:32
06. இஸ்ரவேல் புத்திரர் - 11நாளாகமம் 28:8-9
07. கிறிஸ்பு - அப்போஸ்தலர் 18:8
08. சூனேமியாளின் மகன் - 11இராஜாக்கள் 4:8,17-20
09. சவுல் - 1சாமுவேல் 28:15
10. எசேக்கியேல் - எசேக்கியேல் 3:14

# குறுக்கெழுத்துப் போட்டி - 113, வினா விடை - 115

## சரியான விடை எழுதியவர்கள்

**தர்மபுரம்**
01. எஸ்.அன்பன்

**பாண்டவெட்டை**
02. எம்.ஜெசிந்தா
03. சி.சுமித்திரா
04. சி.சிவனேஸ்வரன்

**வடகாடு**
05. பா.மாலா

**காரைநகர்**
06. வி.றெபேக்காள்
07. வி.அனுராதா

**கிளிநொச்சி**
08. அ.மேனுஷா

**வேரவில்**
09. இ.வோஜினி +

**திருநெல்வேலி**
10. என்.செல்வன்

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

*அநித்தியமான ஆசீர்வாதங்களின்*
*மேன்மையை இயேசு ஒருபோதும்*
*முதன்மைப்படுத்தவில்லை.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பழிக்குப்பழி

**வேதப்பகுதி: 1பேதுரு 3:8-12**

அருணா ஆஸ்ட்டினின் வீட்டிற்குப் போயிருந்தான். ஆஸ்ட்டின் தன்னுடைய கம்ப்யூட்டர், வீடியோ கேம்ஸ், சைக்கிள், ரிமோட் ரோடு ரோலர் எதையும் அருணாவைத் தொடவிடவில்லை. ஒரு வாரத்திற்குப் பின்பு ஆஸ்ட்டின் அருணா வீட்டிற்கு வந்தான். அருணா தன்னுடைய கீ போர்டு, கிட்டார், டி.வி, போட்டோ அல்பம் ஆகிய எதையும் அருணாவைத் தொடவிடவில்லை.

அருணா செய்தது நியாயம்தான் என்றான் பெரின். அருணா செய்தது தவறு என்றான் கெவின். நீ என்ன சொல்லுகிறாய்?

ஆஸ்ட்டின் தன் பொருட்களைத் தொடவிடாமல் அருணாவைத் தடுத்தது சரியல்ல. ஆனால் அவன் செய்த அதே தவறைத் தான் அருணாவும் செய்தான். இது பழிக்குப் பழி செய்யும் செயல். மற்றவர்கள் நமக்கு தவறு செய்தாலும் நாம் அவர்களுக்கு தவறு செய்யக்கூடாது என்பே இயேசுவின் போதனை.

**சிந்தனைக்கு:-**

**நமக்குத் தீமை செய்தவர்களுக்கு நாம் நன்மையைச் செய்து அவர்களை வெட்கப்படுத்த வேண்டும்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் – ஜூலை 20

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.........................................

முகவரி:.........................................

.........................................

.........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்;
மலையின்மேல் இருக்கிற பட்டணம்
மறைந்திருக்கமாட்டாது. மத்தேயு 5:14




To:

Zion Church Office,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

TO:
NOOLAGAM FOUNDATION
NO 55, SOMASUNDARAM AVE,
CHUNDIKULI,
JAFFNA

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org